www.Padasalai.Net www.TrbTnpsc.com

T.CHARUSREE, I.A.S.,
DIRECTOR
OF
TREASURIES AND ACCOUNTS

Perasiriyar K.Anbazhagan Maaligai,
3rd Floor, No.571, Anna Salai,
Nandanam,
Chennai – 600 035.

N.PALANISELVAM

D.O.Letter.No.1388206/K1/2025 Dated: 27.05.2025

Dear Thiru Kamal Kishore,

Sub: Budgetary Announcement- 2025-26- State Government Salary Package- Salary Accounts maintained by Employees- certain special benefits and concessions given to employees-details-communicated- Regarding.

Ref: 1. Annual Financial Statement presented in the TN Legislative Assembly by Hon'ble Minister of Finance on 14.03.2025.
2. Secretary to Government (Expenditure), Ltr No.9980258/ T&A-III/ 2025, Dated: 28.03.2025.
3. Connected records.

*****

In the reference cited above, as per the Budget Speech for the financial year 2025-26, the Hon'ble Minister of Finance had announced that leading banks have agreed to provide certain benefits to State Government employees, including term and accidental insurance policies. Additionally, special concessions on specific loan products will also be extended to government employees.

The empanelled banks maintaining employee salary accounts have agreed to provide minimum benefits of Rs. 10 Lakh as Term life insurance coverage and Rs. 100 Lakh as Personal Accident Insurance Coverage to Government employees. Further, in case of death of employee due to personal accident, the children of the employee will be provided with educational assistance and unmarried daughters will be provided marriage assistance with a condition that the banks shall provide the above assistance/ coverage /benefits to the Government employees without any cost to the employees.

At this juncture, it is heart-warming to note that after various deliberations and discussions held between the Government of Tamil Nadu and the empanelled banks, the Memorandum of Understanding (MoU) was finalised and signed between the Government and the following seven Banks namely,

...2

Office: 91-44-24342438, Fax: 91- 44 –24364988, E-mail: dta.tn@nic.in, cmr.cta@tn.gov.in
Website: www.tn.gov.in/karuvoolam

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

(1) State Bank of India

(2) Indian Bank

(3) Indian Overseas Bank

(4) Axis Bank

(5) Bank of Baroda

(6) Union Bank of India and

(7) Canara Bank

The goodwill gesture extended by the banks in providing valuable services and benefits to the government employees of Tamil Nadu is highly appreciable and is viewed as a welcome measure. Reciprocally, the employees need to be encouraged to port their bank salary accounts to the empanelled banks in order to avail the concessions, special packages and insurance coverages as mentioned in the announcement.

As part of these efforts, the details of the concessions and coverages outlined in the Memorandum of Understanding (MOU) are provided in the attached document. This information should be disseminated to all Government officials to ensure comprehensive insurance coverage without any omissions. The District Collectors are requested to actively participate in facilitating this welfare measure mooted by the Government for Government employees in order to enrol them in the package immediately.

In this regard, it is requested that all the empanelled banks may be given permission to conduct melas, camps and campaigns in the Government offices to disseminate the information to the Government employees.

With regards,

Yours truly,

T. Charusree 27/5/25

(T. Charusree)

Encl: As above

To

Thiru. A. K. Kamal Kishore, I.A.S.,
District Collector,
Tenkasi District.

www.Padasalai.Net

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

N.PALANISELVAM

19.

மாண்புமிகு நிதி அமைச்சர் 2025-26 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் வெளியிட்ட அறிவிப்பு.

மாண்புமிகு நிதி அமைச்சர் 2025-26 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை சட்டப்பேரவையில் தாக்கல் செய்தபோது கீழ்காணும் அறிவிப்புகளை வெளியிட்டார்கள். அதன்படி தமிழ் நாடு அரசு வங்கிகளுடன் ஏற்படுத்தப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் காரணமாக அரசு ஊழியர்கள் தங்களது ஊதியக் கணக்குகளை முக்கிய வங்கிகளிடம் பராமரிக்கும் பட்சத்தில், அவர்களுக்கு சில சலுகைகளைக் கட்டணமின்றி வழங்க முன் வந்துள்ளன அவற்றில் முக்கியமானவைகளான

- அரசு அலுவலர்கள் எதிர்பாராத விதமாக விபத்தில் இறந்து போனாலோ அல்லது விபத்தின் காரணமாக நிரந்தர ஊனமடைந்தாலோ தனிநபர் விபத்து காப்பீட்டு தொகையாக 1 கோடி ரூபாய் நிதியினை வழங்கிட வங்கிகள் முன்வந்துள்ளன.
- விபத்தில் இறந்த அரசு அலுவலரின் குடும்பத்தில் உள்ள திருமண வயதை எட்டியுள்ள மகளின் திருமண செலவுகளுக்காக தலா ரூபாய் 5 இலட்சம் வீதம் ரூபாய் 10 இலட்சம் வரை நிதியுதவி வங்கிகள் வழங்கிடும்.
- விபத்து காரணமாக இறந்த அரசு அலுவலரின் குடும்பத்தில் பள்ளிக்கல்வியை நிறைவு செய்து கல்லூரியில் உயர் கல்வி பயின்றிடும் மகளின் உயர்கல்விக்கான உதவித்தொகையாக ரூபாய் 10 இலட்சம் வரை வங்கிகள் வழங்கிடும்.
- அரசு அலுவலர்கள் தங்களது பணிக்காலத்தில் எதிர்பாராமல் இயற்கை மரணம் அடைந்தால் ஆயில் காப்பீட்டு தொகையாக ரூபாய் 10 இலட்சம் வங்கிகள் வழங்கிடும்.
- மேலும் தனிநபர் வங்கிக் கடன் வீட்டுக் கடன் கல்விக் கடன் ஆகியவற்றை அரசு அலுவலர்கள் பெறும்போது உரிய வட்டி சலுகைகள் வழங்கிடவும் முக்கிய வங்கிகள் முன்வந்துள்ளன.

மேலும் மேற்கூறிய வங்கிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொள்வதுடன் குறித்த காலத்தில் பயன்கள் அரசு அலுவலரின் குடும்பங்களுக்கு கிடைத்துள்ளதை தமிழக அரசின் கருவூலத்துறை ஒருங்கிணைக்கும் என அறிவித்தார்கள்.

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

இச்சலுகைகளை வழங்கும் பட்டியலிடப்பட்ட வங்கிகள்:

1. பாரத ஸ்டேட் வங்கி
2. இந்தியன் வங்கி
3. இந்தியன் ஓவர்சீஸ் வங்கி
4. கனரா வங்கி
5. ஆக்ஸிஸ் வங்கி
6. பேங்க் ஆப் பரோடா
7. யூனியன் பேங்க் ஆப் இந்தியா

- எனவே, மேற்கூறிய சலுகைகள் மேலே பட்டியலிடப்பட்டுள்ள வங்கிகளில் தங்களது ஊதியக் கணக்கைப் பராமரிக்கும் அரசு ஊழியர்களுக்கு மட்டுமே கிடைக்கும்.

- பட்டியலிடப்பட்ட வங்கிகள் தங்களது வாடிக்கையாளராக உள்ள அரசு ஊழியர்களுக்கு மேற்குறிப்பிட்ட சலுகைகளுடன் பிற சலுகைகளையும் வழங்க முன்வந்துள்ளது.

- வங்கிகள் வாரியாக வழங்கப்படும் சலுகை விவரங்களை எளிதாகத் தெரிந்து கொள்ளும் வகையில் ஒப்புமை நோக்கில் களஞ்சியம் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. இதனை அறிய கீழ்க்காணும் இணைப்பினை சொடுக்கவும். (www.karuvoolam.tn.gov.in/web/tnta/cabpb) CABPB - TNTA - Kalanjiyam

- இந்தப் பட்டியலில் இல்லாத வங்கிகளில் ஊதிய கணக்கினை அரசு ஊழியர்கள் பராமரிப்பதில் எந்தவித தடையும் இல்லை. அனால், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் அறிவித்த சலுகைகள் கிடைக்கப் பெறாது.

www.Padasalai.Net

யார் யாருக்கு சலுகைகள் கிடைக்கும்:

- அரசு ஊழியர் நிரந்தரமான அரசுப் பணியில் இருந்திடல் வேண்டும்.
- ஒப்பந்த அடிப்படையில், தற்காலிகமாக பணியில் உள்ளவர்கள் இத்திட்டத்தின் கீழ் பயன் பெற இயலாது என வங்கிகள் தெரிவித்துள்ளன.
- அரசு ஊழியர்கள் மேற்குறிப்பிட்ட வங்கியில் தங்களது ஊதிய கணக்கை பராமரித்திடும் பட்சத்தில் மட்டுமே கிடைக்கும்.
- எனினும், சில வங்கிகள் அரசு ஊழியருக்கு ஊதிய கணக்கில் வரவாக்கப்படும் குறைந்தபட்ச நிகர ஊதியத்தினைப் பொறுத்து சலுகைகளை வழங்குகின்றன. அவைகளாவன

வங்கி	குறைந்தபட்ச நிகர ஊதியம் வரவு *(Net Salary should not be less than)*
பாரத ஸ்டேட் வங்கி	*Rs. 10,000*
இந்தியன் வங்கி	*Rs. 10,000*
இந்தியன் ஓவர்சீஸ் வங்கி	நிபந்தனை இல்லை
கனரா வங்கி	நிபந்தனை இல்லை
ஆக்ஸிஸ் வங்கி	*Rs. 10,000*
பேங்க் ஆப் பரோடா	நிபந்தனை இல்லை
யூனியன் பேங்க் ஆப் இந்தியா	நிபந்தனை இல்லை

www.Padasalai.Net

ஒருவர் எப்போது இந்த திட்டத்தின் கீழ் இணைவார்?

ஒவ்வொரு வங்கியும் தனித் தனியான வழிகாட்டு நெறிமுறைகளை வழங்கியுள்ளனர்

வங்கி	ஏற்கனவே ஊதிய கணக்கு வைத்திருப்பின் – (வங்கியுடன் அரசு ஒப்பந்தம் ஏற்படுத்திய நாளில் இருந்து)	புதியதாக ஊதிய கணக்கு துவங்கினால்- (புதிய ஊதிய கணக்கு துவங்கி அதில் முதல் ஊதியம் பெறப்பட்ட நாளில் இருந்து)
ஸ்டேட் பேங்க் ஆப் இந்தியா	22 ஆம் நாளில் நீங்கள் இத்திட்டத்தின் பலன்களை பெற முடியும். **ஆயுள் காப்பீடு:** 22 ஆம் நாள் முதல் **விபத்து காப்பீடு:** அடுத்த மாதத்தின் 4 ஆம் நாள் முதல்	22 ஆம் நாளில் நீங்கள் இத்திட்டத்தின் பலன்களை பெற முடியும் **ஆயுள் காப்பீடு:** 22 ஆம் நாள் முதல் **விபத்து காப்பீடு:** அடுத்த மாதத்தின் 4 ஆம் நாள் முதல்
இந்தியன் வங்கி	1 மாதத்திற்கு பிறகு நீங்கள் இத்திட்டத்தின் பலன்களை பெற முடியும்	தொடர்ச்சியான 2 மாத ஊதியம் பெறப்பட்ட நாளில் இருந்து இத்திட்டத்தின் பலன்களை பெற முடியும்
இந்தியன் ஓவர்சீஸ் வங்கி	7 ஆம் நாளில் இருந்து நீங்கள் இத்திட்டத்தின் பலன்களை பெற முடியும்	அடுத்த மாதத்தின் 22ஆம் நாளில் இருந்து நீங்கள் இத்திட்டத்தின் பலன்களை பெற முடியும்
கனரா வங்கி	10 ஆம் நாளில் இருந்து நீங்கள் இத்திட்டத்தின் பலன்களை பெற முடியும்	அடுத்த மாதத்தின் 22ஆம் நாளில் இருந்து நீங்கள் இத்திட்டத்தின் பலன்களை பெற முடியும்
ஆக்சிஸ் வங்கி	30 ஆம் நாளில் நீங்கள் இத்திட்டத்தின் பலன்களை பெற முடியும்.	60 ஆம் நாளில் நீங்கள் இத்திட்டத்தின் பலன்களை பெற முடியும்.
பேங்க் ஆப் பரோடா	30 ஆம் நாளில் நீங்கள் இத்திட்டத்தின் பலன்களை பெற முடியும்.	முதல் ஊதியம் பெறப்பட்ட நாளில் இருந்து **22 ஆம் நாள் முதல்** இத்திட்டத்தின் பலன்களை பெற முடியும்.
யூனியன் பேங்க் ஆப் இந்தியா	வங்கியுடன் அரசு ஒப்பந்தம் ஏற்படுத்திய நாளில் இருந்து	முதல் ஊதியம் பெறப்பட்ட நாளில் இருந்து **22 ஆம் நாள் முதல்**

www.Padasalai.Net

வங்கி வழங்கப்படும் சேவைகள் எப்போது முடிவுக்கு வரும்?

1. அரசு அலுவலர் எப்போது வயது மூப்பின் காரணமாக ஓய்வு வயதை அடையும் போது
2. வயது முதிர்வு காரணமாக பணி மூப்பு
3. விருப்ப ஓய்வு
4. பணி நீக்கம்
5. தொடர்ந்து மூன்று மாதங்களாக வங்கிக் கணக்கில் ஊதியம் வராமை
6. பட்டியலிடப்படாத வங்கியில் ஊதிய கணக்கை மாற்றி இருப்பின்
7. ஒரு பட்டியலிடப்பட்ட வங்கியில் இருந்து மற்ற பட்டியிலிடப்பட்ட வங்கிக்கு கணக்கு எண்ணை மாற்றிடும் போது முந்தைய வங்கியில் இருந்து இச்சலுகைகளை பெற முடியாது.
8. பொதுவாக அனைத்து வங்கிகளும் பணி ஓய்வு பெறும் தேதி வரை இத்தகைய சலுகைகளை வழங்குகின்றன எனினும் பேங்க் ஆப் பரோடா மற்றும் யூனியன் பேங்க் ஆப் இந்தியா வங்கியானது ரூபாய் ஒரு கோடிக்கான விபத்துக் காப்பீட்டுத் தொகையை 70 வயது வரை வழங்குகின்றனர். கனரா வங்கி ஒரு கோடிக்கான விபத்துக் காப்பீட்டுத் தொகையை 65 வயது வரை வழங்குகின்றனர். ஊதிய கணக்கில் பணி ஓய்வுக்கு பின்னும் தொடர்ந்து ஓய்வூதியம் பெறப்படின் இச்சலுகையை பெறலாம் என வங்கியால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வங்கி	எந்த வயது வரை காப்பீடு வழங்கப்படும்	
	ஆயுள் காப்பீடு	விபத்து காப்பீடு
பாரத ஸ்டேட் வங்கி	60 வயது வரை	60 வயது வரை
இந்தியன் வங்கி		60 வயது வரை
இந்தியன் ஓவர்சீஸ் வங்கி		60 வயது வரை
கனரா வங்கி		65 வயது வரை
ஆக்ஸிஸ் வங்கி		60 வயது வரை
பேங்க் ஆப் பரோடா		70 வயது வரை
யூனியன் பேங்க் ஆப் இந்தியா		70 வயது வரை

www.Padasalai.Net

வங்கிச் சேவைகளைப் பெற அரசு ஊழியர்கள் செய்ய வேண்டியது?

- இச்சலுகைகளை பெற கட்டணம் / பிரீமியம் / சந்தா எதுவும் அரசு ஊழியரால் செலுத்த வேண்டியது இல்லை. மேற்கூறிய சேவைகள் இலவசமாக பட்டியலிடப்பட்ட வங்கிகள் தங்களுடைய வாடிக்கையாளர்களான அரசு ஊழியர்களுக்கு வழங்க முன்வந்துள்ளன.
- அரசு ஊழியர் தற்போது வேறு ஏதேனும் பட்டியலிடப்படாத வங்கிகளில் கணக்கினை பராமரித்து வரும்பட்சத்தில் மேற்கூறிய சலுகைகளை பெற எதேனும் பட்டியலிடப்பட்ட வங்கிகளில் கணக்கைத் துவக்கி அதனை புதிய கணக்காக மாற்றம் செய்திடலாம்.
- வங்கியின் கிளை மேலாளரிடம் தொடர்பு கொண்டு புதிய கணக்கை *(State Government Salary Package)* எனும் தொகுப்பின் கீழ் இணைத்துக் கொள்ள வேண்டும். இதற்கென பிரத்தியேகப்படிவும் களஞ்சியம் இணையத்தளத்தில் உள்ளது. அதனை பதிவிறக்கம் செய்து தேவையான பதிவுகளை மேற்கொண்டு கையொப்பமிட்டு தொடர்புடைய வங்கி கிளையில் கொடுத்திட வேண்டும்.
- கொடுக்கப்பட்ட படிவத்தின் அடிப்படையில் உங்களுடைய வங்கியின் மேலாளர் தங்களது ஊதியக் கணக்கை மேற்கூறிய தொகுப்பின் கீழ் மாற்றம் செய்து விட்டாரா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.
- உங்களுடைய வங்கி கணக்கில் தங்களின் ஆதார் எண், தனிநபர் கணக்கு அட்டை எண், கைபேசி எண் ஆகியன சரியாக பதிவிடப்பட்டுள்ளது என்பதையும் சரிபார்த்திட வேண்டும்.
- மேலே துவக்கப்பட்ட புதிய கணக்கு எண்ணிற்கு ஊதியம் வரவு வைக்க எதுவாக உங்களுடைய கணக்கு அலுவலரிடம், புதிய ஊதியக் கணக்கினை அளித்திட வேண்டும். இதற்கான வேண்டுகோள் கடிதம் ஒன்றும், புதிய வங்கி கணக்கு புத்தகத்தின் தங்கள் விவரங்கள் அடங்கிய முகப்பு அட்டை பகுதியை இணைத்து அளித்திட வேண்டும். அல்லது, கைபேசி மூலம் களஞ்சியம் *App* ல் உள்நுழைந்து அதில் ஏற்கனவே உள்ள கணக்கு எண்ணிற்கு பதிலாக புதிய ஊதிய வங்கிக் கணக்கு எண்ணின்

பதிவுகளை மேற்கொண்டு கணக்கு அலுவலருக்கு விவரத்தைத் தெரிவித்திட வேண்டும்.

- கணக்கு அலுவலர் – ஊழியரிடம் அவர் தேர்வு செய்துள்ள வங்கியின் புதிய ஊதியக் கணக்கை உள்ளீடு செய்திடலாம். அச்சமயம், காலத்தின் அருமை கருதி ஊழியரிடம் சுய சான்று பெற்று பெற்று மாற்றம் செய்திடலாம்.
- முன்பே குறிப்பிட்டது போல சில நேர்வுகளில் மூன்று மாத ஊதியம் வங்கி கணக்கில் வரவு வைக்கப்படாத சமயங்களில் புதிய கணக்கானது சாதாரண கணக்காக மற்றுமாகிவிடும் அச்சமயங்களில் எதிர்பாராத நிகழ்வு ஏதேனும் ஏற்படின் அதற்கான இழப்பீட்டினை பெற இயலாது
- எனவே தொடர்புடைய அலுவலர் மூன்று மாத கால ஊதியம் வரவு வைக்கப்படாத நிலையில் பின் எப்பொழுது ஊதியம் பெறப் படுகிறதோ அப்பொழுது உடனடியாக தொடர்புடைய வங்கி கிளையைத் தொடர்புகொண்டு அந்த கணக்கினை மீள ஊதியக் கணக்காக மாற்றம் செய்திட வேண்டும்.
- அரசு ஊழியர்கள் தங்களுடைய வங்கிக் கணக்கில் நாமினி விவரங்களை முழுமையாக பூர்த்தி செய்திட வேண்டும் நாமினி பார்ம் ஒவ்வொரு வங்கியும் தனித்தனியாக படிவங்களை பயன்படுத்துவதால் அதனை தொடர்புடைய வங்கி கிளையில் பெற்று பதிவு செய்து கையொப்பமிட்டு வங்கி மேலாளரிடம் தந்து தரவேற்றம் செய்திட வேண்டும்.
- சில சமயங்களில் வாரிசுதாரர் பதிவு மேற்கொள்ளப்படவில்லை என்று காப்பீடு நிராகரிக்கப்படவும் வாய்ப்பு உள்ளதால் இதனை அனைத்து அரசு ஊழியர்களும் பதிவேற்றம் செய்திட ஆவன செய்ய வேண்டும்

www.Padasalai.Net

<u>வங்கிக் கணக்குகளை துவங்குதல் மற்றும் இணைத்தல்.</u>

இச்சலுகைகளை வழங்கிட முன்வந்த முன்னோடி வங்கிகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தினை அரசு செய்துள்ளது. இச்சலுகைகளை வங்கிகளே எந்தவித கட்டணமும் இன்றி தனது வாடிக்கையாளர்களான அரசு ஊழியர்களுக்கு வழங்கியுள்ளது. எனவே அரசு ஊழியர்கள் தங்களுக்கு தேவைப்படும் வங்கிச் சேவைகளை தொடர்புடைய வங்கிகளிடம் இருந்து பெற்றுக்கொள்ளலாம்.

மேற்கூறிய சலுகைகளை அரசு ஊழியர்கள் பெற செய்ய வேண்டியது கீழ் வருமாறு

I. **<u>அரசு ஊழியர் ஏற்கனவே இப்பட்டியலிடப்பட்ட வங்கிகளில் கணக்கு வைத்திருப்பின் மேற்கொள்ள வேண்டியவை:</u>**

1) அரசு ஊழியர் மேற்கூறிய 7 வங்கிகளில் தங்களது வங்கிக் கணக்கை பராமரித்து வரும் பட்சத்தில் அக்கணக்குகள் துவங்கிய சமயத்தில் சாதாரண சேமிப்புக் கணக்காகவோ (அ) ஊதியக் கணக்காகவோ வங்கி அலுவலரால் குறிக்கப்பட்டு இருக்கலாம்.

2) அவ்வாறு உள்ள கணக்குகளை ***State Government Salary Package (SGSP)*** என்கிற பிரிவிற்குள் குறியீடு செய்திட வேண்டும். அப்போது தான் வங்கிகள் வழங்கும் சலுகைகளைக் கட்டணமின்றி பெற இயலும்.

3) சேமிப்பு கணக்காகவோ அல்லது ஊதியக்கணக்காகவோ உள்ள வங்கிக்கணக்குகளை ***SGSP*** என்கிற பிரிவிற்குள் கொண்டுவருவதற்கு களஞ்சியம் இணையதளத்தின் இணைப்பில் உள்ள கடிதத்தை நிரப்பி அருகிலுள்ள வங்கியின் கிளையில் கொடுத்து உங்கள் வங்கிக் கணக்கை ***SGSP*** ஆக மாற்றிக் கொள்ளலாம்.

4) மேலும், இவ்வாறு மாற்றம் செய்திடும் போது உங்களுடைய வங்கிக் கணக்கு வேறு ஒரு வங்கிக் கிளையில் இருந்து அதனை பராமரிக்க இயலாத நிலை இருப்பின் நீங்கள் உங்கள் அலுவலகத்திற்கு அருகில் உள்ள கிளையிலேயே மாற்றம் செய்திட இயலும். அதற்கென வங்கியின் மேலாளரை அணுகலாம்.

II. **<u>மேற்குறிப்பிட்ட வங்கிகளில் புதிய கணக்கு துவக்கிடும் போதே *SGSP* ஆக துவங்குதல்.</u>**

மேற்குறிப்பிடப்பட்டுள்ள வங்கிகளைத் தவிர்த்து பிற வங்கிகளில் தங்களுடைய ஊதியக் கணக்கு இருப்பின் அக்கணக்குகள் *SGSP* என்கிற வகையில் வராது மற்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்ட சலுகைகள் குறித்து எந்தவொரு புரிந்துணர்வு ஒப்பந்தமும் ஏற்படுத்தப்படவில்லை. எனவே, அந்த வங்கிகளில் ஊதியக்கணக்கு வைத்துள்ளவர்கள், மேற்குறிப்பிட்ட 7 பட்டியலிடப்பட்ட வங்கிகளில் ஏதேனும் ஒன்றில் புதியதாக கணக்குத் துவங்கவேண்டுமெனில், புதிய கணக்கு துவக்கிடும் அதே வேளையில் *SGSP* கணக்காக துவங்கிடலாம்.

www.Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.com

அவ்வாறு கணக்குத் துவங்கும்போது *SGSP* பிரிவின் கீழ் கணக்குத் துவங்கிட வேண்டுகோள் கடிதத்தினை வங்கிக்கிளையில் சமர்ப்பித்திட வேண்டும்.

III. **பட்டியலிடப்பட்டுள்ள வங்கிகளுக்கிடையே வங்கிக் கணக்கை மாற்றுதல்:**

சில அரசு ஊழியர்கள் தங்கள் ஊதியக் கணக்கை புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டுள்ள ஏதேனும் ஒரு வங்கியிலிருந்து மற்றொரு புரிந்துணர்வு செய்யப்பட்டுள்ள வங்கியில் மாற்றம் செய்திடவேண்டுமெனில் மாற்றம் செய்திடலாம். அவ்வாறு மாற்றம் செய்திட்ட வங்கிக் கணக்கினை ***SGSP*** எனக் குறிப்பிட்டு துவக்கிடவேண்டும் மேலும் அவற்றை முறையே ***DDO*** விடம் தெரிவித்து அக்கணக்கினை களஞ்சியம் இணையதளத்தில் பதிவு செய்திட வேண்டும்.

ஒரே அரசு ஊழியரின் பல்வேறு கணக்குகள் பல்வேறு வங்கிகளிடம் *SGSP* என பதிவு செய்யப்பட்டு இருப்பினும், எந்த வங்கிக் கணக்கில் மாத ஊதியம் பெறப்படுகிறதோ? அக்கணக்கிற்கே சலுகைகள் வழங்கப்படும். என புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ள வங்கிகள் தெரிவித்துள்ளன.

IV. **வங்கி கணக்குடன் வாரிசுதாரரை இணைத்தல்:**

இந்த காப்பீட்டு தொகையினை பெறுவதற்கான முக்கியமானது செயல், அரசு ஊழியரின் வாரிசுதாரரை வங்கி கணக்கு எண்ணுடன் இணைத்தல் ஆகும். பெரும்பாலான நிகழ்வுகளின் காப்பீட்டுத்தொகை மறுக்கப்படுவதற்கான முக்கியமான காரணியாக இது உள்ளது. எனவே அரசு ஊழியர்கள் அனைவரும் தங்களது வங்கிக் கணக்குடன் வாரிசுதாரரை இணைக்க வேண்டும். இதற்கென ஒவ்வொரு வங்கியும் அதற்கென பிரத்யேக படிவங்களை பயன்படுத்துவதினால் அதனை வங்கிக் கிளைகளில் பெற்று படிவத்தை முறையை நிரப்பி வங்கி அலுவலர்களால் வாரிசுதாரர் விவரம் இணைக்கப்பட்டு இருப்பதை உறுதி செய்திட வேண்டும்.

www.Padasalai.Net

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

ஆயுள் காப்பீடு

ஆயுள் காப்பீடு: அரசு ஊழியர் தன்னுடைய பணிக்காலத்தில் மரணம் அடையும் போது அவருக்கு வழங்கப்படும் இழப்பீடு **ஆயுள் காப்பீடு** ஆகும். காப்பீட்டுத் தொகை அரசு ஊழியர் இயற்கை மரணம் அடையும் பட்சத்தில் மட்டுமே பெற முடியும். இயற்கை மரணம் என்பது வயது மூப்பு மூப்பின் காரணமாகவோ அல்லது உடல்நல குறைவின் காரணமாகவோ ஏற்படும் மரணத்தை மட்டுமே குறிக்கும். தற்கொலை மற்றும் விபத்து மூலம் ஏற்படும் மரணங்களுக்கு இதன் மூலம் இழப்பீடு கிடைக்கப் பெறாது.

- பொதுச்சந்தையில் ஆயுள் காப்பீடு பெறும்போது அதற்கென சில நிபந்தனைகள் உள்ளன அதாவது தனி நபர் கட்டாயமாக மருத்துவ பரிசோதனை மற்றும் அந்த காப்பீட்டின் மீது இழப்பீடு பெற கட்டாய காத்திருப்பு. ஆகியன நடைமுறையில் உள்ளது
- ஆனால் இந்த திட்டத்தின் கீழ் கட்டாய முன் மருத்துவ பரிசோதனையோ அல்லது கட்டாய காத்திருப்பு காலமும் இல்லை என வங்கிகள் தெரிவித்துள்ளன
- இந்த ஆயுள் காப்பீடு எந்த நேரத்தில் *(24X7)* ஏற்படும் மரணத்தையும் உள்ளடக்கியது.
- இந்த காப்பீட்டின் படி அரசு ஊழியர் இறக்கும் பட்சத்தில் அதற்கான இழப்பீட்டினைப் பெறத் தகுதியுடைய தொடர்புடைய அரசு ஊழியரின் நாமினி அல்லது வாரிசுதாரர் இதனை பெற முடியும்
- இழப்பீட்டுத் தொகை முறையே யாருக்கு செல்லும்?
  - வங்கிக் கணக்கு இணையருடன் *(Joint Account)* துவக்கப்பட்டு பராமரிக்கப்படும் பட்சத்தில் இணையருக்கு வழங்கப்படும்.
  - தனிக்கணக்காக இருப்பின் , அரசு ஊழியர் யாரை நாமினியாக குறிப்பிட்டுள்ளாரோ அவரையே சென்றடையும்.
  - நாமினியும் இல்லாத பட்சத்தில் அவருடைய சட்டப்படியான வாரிசுக்கு சென்றடையும்

➢ வங்கிகள் வழங்கும் விபத்து காப்பீட்டு தொகை விவரம் களஞ்சியம் இணையதளத்தில் எளிதாக புரியும் வகையில் பட்டியலிடப்பட்டுள்ளது. www.karuvoolam.tn.gov.in/web/tnta/cabpb எனினும் அவற்றின் சுருக்கம் கீழ்வருமாறு

வங்கி	விபத்துக் காப்பீட்டு தொகை. ரூபாய் இலட்சத்தில்
பாரத ஸ்டேட் வங்கி	10
இந்தியன் வங்கி	10
இந்தியன் ஓவர்சீஸ் வங்கி	10
கனரா வங்கி	10
ஆக்ஸிஸ் வங்கி	10
பேங்க் ஆப் பரோடா	15
யூனியன் பேங்க் ஆப் இந்தியா	10

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

N.PALANISELVAM

விபத்து காப்பீடு

விபத்து காப்பீடு என்பது எதிர்பாராத விதமாக விபத்து மூலம் ஏற்படும் மரணம் மற்றும் உடல் ஊனம் ஆகியவற்றுக்கான காப்பீடு ஆகும். இந்த விபத்தானது சாலை விபத்து மற்றும் இதர விதமான விபத்து மூலம் ஏற்படும் விபத்துகளுக்கானது மட்டுமே ஆகும்

- ஒரு அரசு ஊழியருக்கு விபத்து காரணமாக மரணம் ஏற்படும்போது அவர் அந்த காப்பீட்டு தொகையைப் பெற விபத்து நடைபெற்ற நாளுக்கு முந்தைய *90* நாட்களில் ஒரு முறையாவது மாத ஊதியத்தைத் தொடர்புடைய ஊதியக் கணக்கில் பெற்று இருக்க வேண்டும்.
- புதியதாக ஒரு நபர் அரசு ஊழியராக பணியில் சேர்ந்து அவருடைய அப்படியே வங்கி கணக்கை ஊதிய கணக்காக துவக்கி முறையே குறியீடு செய்திருப்பின், ஒரு மாதமாவது புதிய கணக்கில் ஊதியத்தினை பெற்றுவிடும் பட்சத்திலேயே இழப்பீடு பெற தகுதியானவர் ஆகிறார்.
- விபத்து காப்பீடானது தற்கொலை மற்றும் வேண்டுமென்றே உடலில் காயங்களை ஏற்படுத்தி அதன் காரணமாக மரணத்திடும் பட்சத்தில் கிடைக்கப் பெறாது
- மேலும் கீழ்க்காணும் நிகழ்வுகளிலும் விபத்து காப்பீட்டு தொகையினை பெற இயலாது
    - தற்கொலை
    - மதுஅருந்தி அல்லது போதை பொருட்களை உட்கொண்டு விபத்து மூலம் ஏற்படும் மரணம்
    - பால்வினை நோய் காரணமாக மரணம்
    - கொலை காரணமாக மரணம்
    - அணுக்கதிர் கசிவு காரணமாக மரணம்
    - கதிரியக்க கழிவுகளை கையாளுதல் காரணமாக மரணம்
    - பிரசவ கால மரணங்கள்
    - சாலை விதிகளை மீறியதால் ஏற்படும் மரணங்கள்.

போன்றவற்றில் விபத்து காப்பீடு செல்லாது. இது தொடர்பாக அவ்வப்போது ஏற்படும் காப்பீட்டு தொடர்பான செயல்பாட்டு நெறிமுறைகளின்படி மாற்றம் ஏற்படும் அதுவே செல்லத்தக்கதாக இருக்கும்.

- விமான விபத்து காரணமாக ஏற்படும் மரணங்களுக்கான இழப்பீடு அந்த விமான பயணத்திற்கான பயணச்சீட்டு *(Ticket)* தொடர்புடைய வங்கியின் காசோலை, இன்டெர்நெட் வங்கி, டெபிட் கார்டு ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றை பயன்படுத்தி பெற்றிருக்கும் போது மட்டுமே இழப்பீடு வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.
- விபத்து காரணமாக மரணம் ஏற்படின், அதற்கான இழப்பீட்டுத் தொகை முறையே யாருக்கு செல்லும்?
    - வங்கிக் கணக்கு இணையருடன் *(Joint Account)* துவக்கப்பட்டு பராமரிக்கப்படும் இணையருக்கு வழங்கப்படும்.

www.Padasalai.Net

- தனி கணக்காக இருப்பின், அரசு ஊழியர் யாரை நாமினியாக குறிப்பிட்டுள்ளாரோ அவரையே சென்றடையும்.
- நாமினியும் இல்லாத பட்சத்தில் அவருடைய சட்டப்படியான வாரிசுக்கு சென்றடையும்

➢ வங்கிகள் வழங்கும் விபத்து காப்பீட்டு தொகை விவரம் களஞ்சியம் இணையதளத்தில் எளிதாக புரியும் வகையில் பட்டியலிடப்பட்டுள்ளது. (www.karuvoolam.tn.gov.in/web/tnta/cabpb) CABPB - TNTA - Kalanjiyam. எனினும் அவற்றின் சுருக்கம் கீழ்வருமாறு

வங்கி	விபத்துக் காப்பீட்டு தொகை. ரூபாய் இலட்சத்தில்
பாரத ஸ்டேட் வங்கி	100
இந்தியன் வங்கி	100
இந்தியன் ஓவர்சீஸ் வங்கி	120
கனரா வங்கி	100
ஆக்ஸிஸ் வங்கி	100
பேங்க் ஆப் பரோடா	அலுவல் நேரத்தில் மரணம்: 125 பிற நேரங்களில் மரணம்: 100
யூனியன் பேங்க் ஆப் இந்தியா	120

www.Padasalai.Net

N.PALANISELVAM

விபத்துக் காரணமாக ஊழியருக்கு ஏற்படும் உடல் ஊனத்திற்கான காப்பீடு.

விபத்து காரணமாக அரசு ஊழியருக்கு உடல் ஊனம் ஏற்படும் பட்சத்தில் அதற்கான காப்பீடு தர வங்கிகள் முன்வந்துள்ளன. சில நிகழ்வுகளில் அரசு ஊழியருக்கு விபத்தின் காரணமாக நிரந்தர மற்றும் முழுமையான உடல் ஊனம் *(Permanent Total Disability)* அல்லது நிரந்தர பகுதி ஊனம் *(Permanent Partial Disability)* ஏற்படும் பட்சத்தில் இழப்பீடு வழங்கப்படும்.

காப்பீட்டு தொகை *IRDAI* வழிகாட்டு நெறிமுறைகளின் படி கீழ்க்காணுமாறு வழங்கப்படுகிறது. மேலும் இப்பட்டியல் அவ்வப்போது *IRDAI* ஆல் மாற்றம் செய்யப்படுகிறது. எனவே அப்போதைய காலத்தில் எந்தப்பட்டியில் நடைமுறையில் உள்ளதோ அதற்கேற்ப இழப்பீட்டுத் தொகை வழங்கப்படும் என வங்கிகள் தெரிவித்துள்ளன.. அதன் விவரம் கீழ்வருமாறு.

Sr. No	Table of Benefits	% of Sum Insured
1	**Accidental Death**	100
2	**Permanent Total Disability:**	
	1.Total and irrecoverable Loss of Sight of both eyes	100
	2. Physical separation or Loss of use of both hands or feet	100
	3. Physical separation or Loss of use of one hand and one foot	100
	4.Loss of sight of one eye and Physical separation or loss of use of hand or foot	100
	5. If such injury shall as a direct consequence thereof, Permanently and totally, disables the insured person from engaging in any employment or occupation of any description whatsoever	100
3	**Permanent Partial Disability**	
A	Loss of Use/ Physical separation	
	i) Loss of sight of one eye	50
	ii) One entire hand	50
	iii) One entire foot	50

www.Padasalai.Net

Sr. No	Table of Benefits	% of Sum Insured
	iv) Loss of toes-all	20
	v) Great-both phalanges	5
	vi) Great-one phalanx	2
	vii) Other than great, if more than one toe lost	1
B	Loss of use-both ears	50
C	Loss of use-one ear	20
D	Loss of four fingers and thumb of one hand	40
E	Loss of four fingers	35
F	i)Loss of thumb-both phalanges	25
	ii)Loss of thumb-one phalanx	10
G	Loss of index finger	
	i)Three phalanges	10
	ii)Two phalanges	8
	iii)One phalanx	4
H	Loss of Middle finger	
	i)Three phalanges	6
	ii)Two phalanges	4
	iii)One phalanx	2
I	Loss of Ring Finger	
	i)Three phalanges	5
	ii)Two phalanges	4
	iii)One phalanx	2
J	Loss of little finger	
	i)Three phalanges	4
	ii)Two phalanges	3
	iii) One phalanx	2
K	Any other permanent partial disablement	% as assessed by Medical Practitioner appointed by insurance company
L	Loss of Metacarpus	
	(i) First or Second (Additional)	3
	(ii) Third, Fourth or Fifth (Additional)	2

www.Padasalai.Net

N.PALANISELVAM

கல்வி உதவித்தொகை

➢ விபத்து காரணமாக இறந்த அரசு அலுவலரின் குடும்பத்தில் பள்ளிக்கல்வியை நிறைவு செய்து கல்லூரியில் உயர் கல்வி பயின்றிடும் மகளின் உயர்கல்விக்கான உதவித்தொகையாக ரூபாய் 10 இலட்சம் வரை வங்கிகள் வழங்கிடும். அதன் விவரம் கீழ்வருமாறு:

காரணி	பாரத ஸ்டேட் பேங்க்	இந்தியன் வங்கி	ஆக்ஸிஸ்	கனரா வங்கி	பேங்க் ஆப் பரோடா
எந்த படிப்பிற்கு பொருந்தும்	கல்லூரி படிப்பு மட்டும்	கல்லூரி படிப்பு மட்டும்			கல்லூரி படிப்பு மட்டும்
எத்தனை வாரிசுகளுக்கு பொருந்தும்	ஒன்று	ஒன்று	இரண்டு	இரண்டு	இரண்டு
விபத்து நடைபெறும் போது வாரிசின் வயது	18 - 25 வயது	18 - 25 வயது	0 – 22 வயது	25 வயது வரை	25 வயது வரை
விபத்து காரணமாக மரணம் அடைந்தால் மட்டுமே பொருந்தும்	ஆம்	ஆம்	ஆம்	ஆம்	ஆம்
விபத்து காரணமாக முழு ஊனம் அடைந்தால் பொருந்துமா?	இல்லை	இல்லை	இல்லை	இல்லை	ஆம்
அதிகபட்ச தொகை	ரூ. 10 லட்சம்	ரூ. 10 லட்சம்	ரூ. 10 லட்சம்	ரூ. 10 லட்சம்	ரூ. 10 லட்சம்
நிபந்தனை	- ஆண் வாரிசுக்கு ரூ. 8 லட்சம் அதிகபட்ச மாகும் -பெண் வாரிசாக இருப்பின் அதிகபட்ச மாக ரூபாய் 10 லட்சம்	-	- ஒரே ஒரு ஆண் வாரிசு - ரூ. 5 லட்சம் -இரண்டு ஆண் வாரிசுகள் - தலா ரூ. 5 லட்சம் ஆக மொத்தம் - ரூ. 10 லட்சம் - ஒரே ஒரு பெண் வாரிசு- ரூ.10 லட்சம். -இரண்டு பெண் வாரிசுகள் - தலா ரூ. 5 லட்சம் ஆக மொத்தம் - ரூ. 10 லட்சம்	- ஒரே ஒரு ஆண் அல்லது பெண் வாரிசு- ரூ.10 லட்சம்.	- ஆண் அல்லது பெண் வாரிசு- ரூ.10 லட்சம்.

www.Padasalai.Net

திருமண உதவித்தொகை

➢ விபத்தில் இறந்த அரசு அலுவலரின் குடும்பத்தில் உள்ள திருமண வயதை எட்டியுள்ள மகளின் திருமண செலவுகளுக்காக ரூபாய் 10 இலட்சம் வரை நிதியுதவி வங்கிகள் வழங்கிடும். அதன் விவரம் கீழ்வருமாறு:

காரணி	பாரத ஸ்டேட் பேங்க்	இந்தியன் வங்கி	ஆக்ஸிஸ்	கனரா வங்கி	பேங்க் ஆப் பரோடா
யாருக்கு வழங்கப்படும்	பெண் வாரிசுகளுக்கு மட்டும்	பெண் வாரிசுகளுக்கு மட்டும்	பெண் வாரிசுகளுக்கு மட்டும்	பெண் வாரிசுகளுக்கு மட்டும்	பெண் வாரிசுகளுக்கு மட்டும்
எத்தனை வாரிசுகளுக்கு பொருந்தும்	இரண்டு	ஒன்று	ஒன்று	இரண்டு	இரண்டு
விபத்து நடைபெறும் போது வாரிசின் வயது	18 - 25 வயது	18 - 25 வயது	18 - 25 வயது	18 - 25 வயது	18 - 25 வயது
விபத்து காரணமாக மரணம் அடைந்தால் மட்டுமே பொருந்தும்	ஆம்	ஆம்	ஆம்	ஆம்	ஆம்
விபத்து காரணமாக முழு ஊனம் அடைந்தால் பொருந்துமா?	இல்லை	இல்லை	இல்லை	இல்லை	ஆம்
அதிகபட்ச தொகை	ரூ. 10 லட்சம்	ரூ. 10 லட்சம்	ரூ. 10 லட்சம்	ரூ. 10 லட்சம்	ரூ. 10 லட்சம்
நிபந்தனை	- ஒரே ஒரு பெண் வாரிசு - ரூ. 10 லட்சம் - இரண்டு பெண் வாரிசுகள் - தலா ரூ. 5 லட்சம் ஆக மொத்தம் - ரூ. 10 லட்சம்	- ஒரே ஒரு பெண் வாரிசு - ரூ. 10 லட்சம்	- ஒரே ஒரு பெண் வாரிசு - ரூ. 5 லட்சம் - இரண்டு பெண் வாரிசுகள் - தலா ரூ. 5 லட்சம் ஆக மொத்தம் - ரூ. 10 லட்சம்	- ஒரே ஒரு பெண் வாரிசு - ரூ. 10 லட்சம் - இரண்டு பெண் வாரிசுகள் - தலா ரூ. 5 லட்சம் ஆக மொத்தம் - ரூ. 10 லட்சம்	- மொத்தம் - ரூ. 10 லட்சம்

www.Padasalai.Net

N.PALANISELVAM

மருத்துவக் காப்பீடு- விருப்பத்தேர்வு

- சில வங்கிகள் கூடுதல் மருத்துவ காப்பீட்டிற்கான சில திட்டங்களை வைத்துள்ளன.
- இந்த மருத்துவக் காப்பீடு ஊழியர் கட்டணம் செலுத்தி மட்டுமே பெற முடியும். இது இலவசமாக வங்கிகளால் வழங்கப்படுவதில்லை.
- இதில் இரண்டு விதமான திட்டங்கள் வங்கிகளால் வழங்கப்படுகிறது
- இந்த மருத்துவக் காப்பீடு கட்டாயமானது அல்ல. ஊழியரின் விருப்பத்தைப் பொறுத்தது. இதற்கென ஊழியர் தனியே கட்டணம் செலுத்த வேண்டும். அது வங்கிக்கு ஊழியருக்கும் இடையிலான தொடர்பினை பொறுத்தது ஆகும்.
-

திட்டம் 1 (15 Lakh sum assured with 2 lakh deductible)	1. 15 இலட்சத்திற்கான கூடுதல் மருத்துவக் காப்பீடு. 2. இந்த திட்டத்தில் அனுமதிக்கப்பட்ட சிகிச்சைகளுக்கு ஆகும் செலவினம் ரூபாய் 15 இலட்சத்திற்கு கூடுதலாக இருப்பின், அச்செலவினத்தை இத்திட்டத்தின் மூலம் பெறலாம். 3. ஆனால் இந்த ரூபாய் 15 இலட்சத்திற்கான இழப்பிடினைப் பெற ஊழியர் ரூபாய் 2 இலட்சத்தினை தம் சொந்த செலவிலோ அல்லது வேறு தகுந்த காப்பீடில் இருந்தோ மேற்கொள்ளவேண்டும். 4. இது ஒட்டு மொத்த குடும்பத்திற்கு அல்லது தனியருக்கு காப்பீடு பெறலாம். 5. இது தொடர்பாக தொடர்புடைய வங்கியை அணுகலாம். 6. இது ஒரு வருடத்திற்கு ஒருமுறை கட்டணம் செலுத்துவதாகும். கட்டணம் சுமார் Rs. 1600 முதல் Rs. 2500 வரை ஒரு வருடத்திற்கு செலுத்த வேண்டியுள்ளது. 7. இது கட்டாயமானது அல்ல. ஊழியரின் விருப்பத்தைப் பொறுத்தது. ***Plans available:*** ***1. Adult -1*** ***2. Adult 1 and children -1*** ***3. Adult 2 and Children -1*** ***4. Adult 2 and Children -2***

www.Padasalai.Net

திட்டம் 2 ***(30 Lakh sum assured with 3 lakh deductible)***	1. 30 இலட்சத்திற்கான கூடுதல் மருத்துவக் காப்பீடு. 2. இந்த திட்டத்தில் அனுமதிக்கப்பட்ட சிகிச்சைகளுக்கு ஆகும் செலவினம் ரூபாய் 30 இலட்சத்திற்கு கூடுதலாக இருப்பின், அச்செலவினத்தை இத்திட்டத்தின் மூலம் பெறலாம். 3. ஆனால் இந்த ரூபாய் 30 இலட்சத்திற்கான இழப்பிடினைப் பெற ஊழியர் ரூபாய் 3 இலட்சத்தினை தம் சொந்த செலவிலோ அல்லது வேறு தகுந்த காப்பீடில் இருந்தோ மேற்கொள்ளவேண்டும். 4. இது ஒட்டு மொத்த குடும்பத்திற்கு அல்லது தனியருக்கு காப்பீடு பெறலாம். 5. இது தொடர்பாக தொடர்புடைய வங்கியை அணுகலாம். 6. இது ஒரு வருடத்திற்கு ஒருமுறை கட்டணம் செலுத்துவதாகும். கட்டணம் சுமார் Rs. 1600 முதல் Rs. 2500 வரை ஒரு வருடத்திற்கு செலுத்த வேண்டியுள்ளது. 7. இது கட்டாயமானது அல்ல. ஊழியரின் விருப்பத்தைப் பொறுத்தது. ***Plans available:*** ***1. Adult -1*** ***2. Adult 1 and children -1*** ***3. Adult 2 and Children -1*** ***4. Adult 2 and Children -2***

www.Padasalai.Net

துறைத் தலைவர்கள் என்ன செய்ய வேண்டும்?

- வங்கிகள் வழங்கும் இச்சேவைகள் மற்றும் சலுகைகள் குறித்து துறையின் அனைத்து அலுவலர்களுக்கும் தெரியப்படுத்த வேண்டும்.

- பட்டியலிடப்பட்ட வங்கிகளிடம் முறையே தொடர்புகொள்ள எதுவாக ஒரு பற்றாளரை நியமிக்க வேண்டும்.

- இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் படி மூன்று மாதங்களுக்கு ஒரு அரசு ஊழியருக்கு மாத ஊதியம் வரவில்லை எனில் இந்த பலன்களைப் பெற இயலாது. எனவே, மூன்று மாதமோ அல்லது அதற்கு பி எப்போது ஊழியருக்கு ஊதியம் வழங்கப்படுகிறதோ அப்போது அந்த ஊழியர் தொடர்புடைய வங்கியை தொடர்புகொண்டு மீண்டும் இந்த தொகுப்பில் இணைந்து கொள்ள வேண்டும். அதனை துறை உறுதி செய்து கொள்ள வேண்டும்.

- மேலும், ஏதேனும் ஒரு ஊழியர் இயற்கையான முறையிலோ அல்லது விபத்து மூலமோ மரணம் அடைந்தால் அதனை அவருடைய ஊதிய வங்கி கணக்கை பராமரித்து வரும் தொடர்புடைய வங்கிக்கு தெரிவிக்க எதுவாக அவருடைய குடும்பத்திற்கு அறிவுறுத்த வேண்டும்.

- துறைத் தலைவர்கள், அத்துறையில் பணியாற்றும் ஊழியர்களில் மரணம் அடைந்த ஊழியர்கள் தொடர்பான மாதந்திர விரிவான அறிக்கைகளைப் பெற்று ஆய்வு செய்திட வேண்டும்.

- பட்டியலிடப்பட்ட வங்கிகள் தங்கள் துறையை அணுகும் பொது எந்தவித பாரபட்சமும் இன்றி அவர்கள் பிரச்சாரம் செய்திட அனுமதி அளித்திட வேண்டும்.

- தங்கள் துறையில் *IFHRMS* மூலம் இல்லாமல் தங்கள் சொந்த திட்ட வருவாய் மூலமோ அல்லது திட்ட நிதியில் இருந்தோ அல்லது பொது நிதியில் இருந்தோ ஊதியம் பெறும் பட்சத்தில் அந்த ஊதியக் கணக்குகளின் விவரங்களை இயக்குநர், கருவூலம் மற்றும் கணக்குகள் துறைக்கு தெரியப்படுத்த வேண்டும்.

www.Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.com

- அவ்வாறு தெரியப்படுத்தும் போது மட்டுமே கணக்குகளைத் திட்டத்துடன் இணைத்திட ஏழு அது வரை அப்பணியாளர்களின்ப் பலன்களை பெற இயலாது எனவே துறையானது இதற்கு முழு பொறுப்புடன் பணிகளை மேற்கொள்ள வேண்டும்.

www.Padasalai.Net

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

இழப்பீட்டு தொகையைப் பெறும் முறை

இழப்பீட்டு தொகையைப் பெறும் முறை

ஒரு அரசு ஊழியர் இயற்கையாகவோ அல்லது விபத்து காரணமாகவோ மரணம் அல்லது ஊனம் அடைந்தால் அதனை தொடர்புடைய வங்கிக் கிளைக்கு உடனே தெரிவிக்க வேண்டும். அதே சமயத்தில் தொடர்புடைய காப்பீட்டு நிறுவனத்திற்கும் தெரிவிக்க வேண்டும். அதற்கு தொடர்புடைய ஆவணங்களையும் அனுப்பிட வேண்டும்

படி நிலைகள் *(Steps to claim insurance)*

1. **விபத்து / இறப்பு குறித்த தகவல்களை தெரிவித்தல் *(Claim intimation) :***

அரசு ஊழியருக்கு விபத்து ஏற்படின் ஓரிரு நாட்களுக்குள் அதனை தொடர்புடைய வங்கிக் கிளைக்கும் தொடர்புடைய காப்பீட்டு நிறுவனத்திற்கும் விபத்து குறித்த தகவல்களை ***10 நாட்களுக்குள்*** தெரிவிக்க வேண்டும். இதற்கென உள்ள பிரத்யேக படிவம் களஞ்சியம் இணையதளத்தில் தொடர்புடைய வங்கியின் முகப்புக் கோப்பில் உள்ளது.

அதில் காணப்படும் *claim intimation* படிவத்தை நிரப்பி அதனை தொடர்புடைய வங்கிக் கிளையில் சமர்ப்பித்திட வேண்டும்.

2. **ஆவணங்களை சமர்ப்பித்தல் – *(Submission of Documents)***

சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்:

- கோரிக்கை படிவம் ***(Claim form)***
- ஊதியச் சான்றிதழ் ***(Salary slips)***
- ஊதியம் வங்கி கணக்கில் வரவு வைக்கப்பட்டதற்கான ஆவணம் - வங்கி கணக்கு புத்தகம் ***(Bank Passbook)***
- இறப்பு சான்று ***(Death Certificate)***
- உடல் ஊனமாயின்- உடல் ஊன சான்றிதழ் ***(Disability Certificate)***
- நாமினி அடையாள அட்டை ***(Nominee's Identification Card if any)***
- நாமினியின் வங்கி விவரங்கள் ***(Nominee's Bank Account details)***
- கல்வி உதவித்தொகையை பெற தொடர்புடைய கல்வி நிறுவனத்திடமிருந்து ***Bonafide*** சான்றிதழ்

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com

- வயது நிரூபண சான்றிதழ் ***(Age Proof)*** - பிறப்பு சான்றிதழ் *(Birth certificate)* / மதிப்பெண் சான்றிதழ் *(Mark Sheet) / ADHAAR etc.,*

பிற ஆவணங்கள்:

- முதல் தகவல் அறிக்கை ***(FIR)***
- காவல்துறையின் அறிக்கை ***(Police Report)***
- மருத்துவ ஆவணங்கள் ***(Case sheet, summary, other medical documents)***
- பிண பரிசோதனை அறிக்கை ***(Post mortem report)***

3. **காப்பிட்டு நிறுவனங்கள்- ஆவணங்களை சரிபார்த்தல் – *(Verification of Documents by Insurance Company)***
4. **கோரிக்கை ஏற்பு மற்றும் இழப்பீடு வழங்குதல் - *(Claim approval and Payout)***

www.Padasalai.Net

களஞ்சியம் இணையத்தில் இது தொடர்பாக ஏற்படுத்தப்பட்டுள்ள முன்னேடுப்புகள்.

- **இந்த தகவல்கள் குறித்து தெரிந்து கொள்ள களஞ்சியம் இணையதளத்தில் உள்நுழைய வேண்டும்.** (www.karuvoolam.tn.gov.in)



- களஞ்சியம் இனையதளத்தில் உள்நுழைந்தவுடன் கீழ்க்காணும் அறிவிப்பு தோன்றும்.



தமிழ் A+ A A-

The Hon'ble Tamil Nadu Finance Minister has made the following announcements in the Budget Statement for the year 2025-26.

The major banks of Tamil Nadu (SBI,IOB,IB,Canara,Axis,BOB and UBI) have come forward to provide the following benefits free of cost to the government employees who maintain salary accounts with them.

Sl. No.	Benefits	Amount(in Lakhs)
1	Government employee death due to accident	Rs. 100
2	Government employee permanent disability due to accident	Upto Rs. 100
3	Government employee natural death	Rs. 10
4	Financial assistance for marriage expenses of daughters of an officer who has reached marriageable age	Upto Rs. 10
5	Scholarship for higher education of son/daughters of an officer who has died in an accident	Upto Rs. 10
6	Other concessions	See the link

Click the link to know about bank wise concessions in detail.

Learn more >>

- இதனைத் தமிழில் அறிய குறியிடப்பட்ட இடத்தில் சொடுக்கவும்.


தமிழ்

A+ A A-

The Hon'ble Tamil Nadu Finance Minister has made the following announcements in the Budget Statement for the year 2025-26.

The major banks of Tamil Nadu (SBI,IOB,IB,Canara,Axis,BOB and UBI) have come forward to provide the following benefits free of cost to the government employees who maintain salary accounts with them.

Sl. No.	Benefits	Amount(in Lakhs)
1	Government employee death due to accident	Rs. 100
2	Government employee permanent disability due to accident	Upto Rs. 100
3	Government employee natural death	Rs. 10
4	Financial assistance for marriage expenses of daughters of an officer who has reached marriageable age	Upto Rs. 10
5	Scholarship for higher education of son/daughters of an officer who has died in an accident	Upto Rs. 10
6	Other concessions	See the link

Click the link to know about bank wise concessions in detail.

Learn more >>

➢ அறிவிப்பினைத் தொடர்ந்து பிற சலுகைகளைத் தெரிந்து கொள்ளவும், சலுகைகளைப் பிற வங்கிகளுடன் ஒப்பு நோக்கி காணக் குறியிடப்பட்ட இடத்தில் சொடுக்கவும்.


தமிழ்

A+ A A-

The Hon'ble Tamil Nadu Finance Minister has made the following announcements in the Budget Statement for the year 2025-26.

The major banks of Tamil Nadu (SBI,IOB,IB,Canara,Axis,BOB and UBI) have come forward to provide the following benefits free of cost to the government employees who maintain salary accounts with them.

Sl. No.	Benefits	Amount(in Lakhs)
1	Government employee death due to accident	Rs. 100
2	Government employee permanent disability due to accident	Upto Rs. 100
3	Government employee natural death	Rs. 10
4	Financial assistance for marriage expenses of daughters of an officer who has reached marriageable age	Upto Rs. 10
5	Scholarship for higher education of son/daughters of an officer who has died in an accident	Upto Rs. 10
6	Other concessions	See the link

Click the link to know about bank wise concessions in detail.

Learn more >>

www.Padasalai.Net

- ➢ பிறகு கீழ்வரும் திரை தோன்றும். அதில் வங்கிகள் வாரியாக வழங்கும் சேவைகள் தெரியவரும். இதை ஒப்பு நோக்கி உங்களின் வங்கிகளைத் தேர்வு செய்யலாம்.



Government of Tamil Nadu
Department of Finance - Treasuries and Accounts
Kalanjiyam

Home | Finance | Human Resources Management | Treasuries & Accounts | Stakeholders | Reference Document | Term Life and Accident Insurance

Comparative Analysis of Benefits Provided by Banks to State Government Employees

Sl. No.	Benefits	SBI	IOB	Indian Bank	Canara Bank	Axis Bank	Bank of Baroda		UBI
							Civilians (Public servants)	Non Civilians (Uniform services)	
	Eligibility								
1	Monthly income	More than Rs.10000 only	All employees	More than Rs.10000 only	All employees	More than Rs.10000 only	All employees	All employees	All employees
2	Deaprtments	Only full time Government servants and Police personnels	All employees	All employees	All employees	All employees	All employees	All employees	All employees
3	Age	upto 60 years	upto 60 years	upto 60 years	upto 65 years	upto 60 years	upto 70 years	upto 70 years	upto 70 years
	Local Bodies, Boards,								

அதில் கீழ்காணும் விவரங்கள் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன

- ➢ ஒரு ஊழியர் வங்கியில் புதியதாக கணக்கு துவக்கிட வேண்டுமெனில் அதற்கான படிவம்
- ➢ அரசு ஊழியர் ஏற்கனவே தொடர்புடைய வங்கியில் ஊதியக் கணக்கு வைத்திருப்பின் அதனை இத்திட்டத்தின் கீழ் இணைத்திடப் படிவம். இப்படிவத்தை பூர்த்தி செய்து தொடர்புடைய வங்கி மேலாளரிடம் தந்து தங்களுடைய வங்கிக் கணக்கை ஊதியக் கணக்காக மாற்றம் செய்திடலாம்.
- ➢ வங்கிகள் தரும் சேவைகள் குறித்து முழு விவரத்தையும் அறிந்து கொள்ள தகவல்.
- ➢ இயற்கை மரணம் காரணமாக காப்பீட்டு தொகையினை தொடர்புடைய காப்பீட்டு நிறுவனத்திடமிருந்து பெற தேவையான படிவங்கள் மற்றும் வழிகாட்டு நெறிமுறைகள்
- ➢ அதேபோன்று விபத்து காப்பீடு தொகையினை பெறுவதற்கு தேவையான அனைத்து படிவங்களின் விவரங்கள்.
- ➢ அது மட்டுமின்றி தங்கள் குறைகளை களையும் பொருட்டு உரிய தொடர்பு முகவரிகள் மற்றும் அந்த காப்பீட்டின் வகைக்கு ஏற்ப களஞ்சியம் இணையதளத்தில் வங்கி வாரியாக தரப்பட்டுள்ளது

- ➢ இந்தப் பக்கத்திற்குச் செல்ல முறையே உங்களுடைய வங்கியின் எழுத்துகளின் மீது குறியிடப்பட்ட இடத்தில் சொடுக்கவும்.

www.Padasalai.Net



- ➢ அல்லது திரையின் மீது குறியிடப்பட்ட இடத்தில் சொடுக்கவும்.. பிறகு, கீழ்வரும் திரை தோன்றும் அதில் உங்கள் வங்கியைத் தேர்வு செய்யவும்



www.Padasalai.Net

www.Padasalai.Net www.TrbTnpsc.com





www.Padasalai.Net

Kindly Send Me Your Study Materials To Us Email ID: padasalai.net@gmail.com